# Health Awareness

For Service Providers 2014
Tamil Nadu

# Circular No. 7 / 2014

## ஜனனி சுரக்ஷா யோஜனா வழிகாட்டு முறைகள் - Guidelines




**NATIONAL HEALTH MISSION**
State Health Society - TN
DMS Complex, Chennai

# Circular No.7 / 2014

## Roc No: 3543 / P5 / SHS / 2014,
## Dated 24.06.2014

**Dr.C.N.Mahesvaran, IAS.,**
Mission Director

**National Health Mission,**
State Health Society-TN
DMS Complex, Chennai – 6

# Circular No. 7 / 2014

**Roc No: 3543/P5/SHS/2014, Dated, 24.06.2014**

## ஜனனி சுரக்ஷா யோஜனா வழிகாட்டு முறைகள்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள அனைத்து தாய்மார்களையும் மருத்துவ நிலையங்களில் பிரசவிக்கச் செய்வதன் மூலம் தாய் மற்றும் இளஞ்சிசு இறப்பு விகிதத்தை வெகுவாகக் குறைப்பதுதான் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் குறிக்கோளாகும். இதன் மூலம் பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டம்–2ன் குறிக்கோள்களை விரைவில் அடைய முடியும்.

1. 2005ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டம் தேசிய ஊரக நலக் குழுமத்தின் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக பிரசவிக்கும் தாய்மார்கட்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

2. தமிழகத்தில் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தினை கிராமப்புறத்தில் செயல்படுத்துவதற்காக 2 டி.எண்.18 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் (ஈஏபி–11) துறை, நாள் 24.2.2006 அரசாணையை மாநில அரசு வெளியிட்டது. இத்திட்டம் 1.1.2007 முதல் நகர்புறத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் 8.05.2013 முதல் நிகழும் பிரசவங்களுக்கு வயது வரம்பு குறித்த நிபந்தனையையும், இரண்டு உயிருடன் உள்ள குழந்தை பெறும் வரை மட்டுமே ஊக்கத் தொகை வழங்கப்படும் என்ற நிபந்தனையையும் மைய அரசு நமது மாநிலத்திற்கு தளர்த்தி உள்ளது.

3. தற்போதைய நடைமுறையின்படி தமிழ்நாட்டில் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டப் பயனாளிகளுக்கு உரிய ஊக்கத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

### 1. <u>பயனாளிகள்</u>

- ✓ வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்
- ✓ பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடராக இருப்பின் வருமான வரம்பு இல்லை.

### 2. <u>ஊக்கத் தொகை</u>

- ➢ நகர்ப்புற பயனாளிகள் மருத்துவமனைகளில் பிரசவித்தால் ரூ.600/– மட்டும்
- ➢ கிராமப்புற பயனாளிகள் மருத்துவமனைகளில் பிரசவித்தால் ரூ.700/– மட்டும்
- ➢ அனைத்து பயனாளிகளும் வீட்டில் பிரசவித்தால் ரூ.500/– மட்டும்

## 3. ஊக்கத் தொகை வழங்கும் முறை

அரசு மருத்துவமனைகளில் (துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் வட்டம் மற்றும் வட்டம் சாராத மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் நகராட்சி மற்றும் மாநகராட்சியிலுள்ள நகர நலவாழ்வு மையங்கள்) பிரசவம் நடைபெற்றிருந்தால்







1. அரசு மருத்துவமனைகள் எல்லாவற்றிலும் ஊக்கத் தொகைக்கான காசோலை வழங்குமாறு இத்திட்டம் விரிவாக்கப்படுகிறது.எனவே குழந்தை பிறந்த மருத்துவமனையிலேயே காசோலை உடனடியாக வழங்கப்படவேண்டும்.
2. தவிர்க்க இயலாத காரணங்களால் ஊக்கத் தொகை வழங்குவதில் ஏதேனும் காலதாமதம் ஏற்படுமாயின் இக் காலதாமதம் மகப்பேற்றுக்குப் பின் ஏழு நாட்களுக்கு மிகாமல் இருத்தல் அவசியம். இந்த காலதாமதத்திற்கான காரணத்தினை காசோலை வழங்கும் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும். பயனாளி படிவம் கொண்டு வர இயலாத காரணத்தினால், காசோலை வழங்குவதில் தாமதம் ஏற்படக் கூடாது.
3. காசோலை வழங்கும் பதிவேட்டில் உள் நோயாளிகள் பதிவேடு வரிசை எண் (Serial Number of inpatients register) குறிப்பிட வேண்டும்.
4. அனைத்து மருத்துவ நிலையங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் பயனாளிகள் பற்றிய கீழ்க்கண்ட விவரங்களை எழுதி வைத்தல் வேண்டும்.

    1. பயனாளியின் பெயர்
    2. கணவரின் பெயர் மற்றும் முகவரி / தந்தையின் பெயர் மற்றும் முகவரி
    3. உள் நோயாளி பதிவு எண்
    4. பிரசவித்த நாள்
    5. ஊக்கத் தொகை வழங்கிய நாள்

பயனாளிகளின் எண்ணிக்கை 100க்குள் இருப்பின் மாதா மாதமும், 500க்குள் இருப்பின் மாதம் இருமுறையும், 500க்கு மேற்பட்டால் வாராவாரமும் எழுதி வைத்தல் வேண்டும்.

## ஊக்கத்தொகை பெறுவதற்கான சான்றுகள்




ஊக்கத்தொகை பெறுவதற்கான விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட சான்றுகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- வருமானச் சான்றிதழ் அல்லது வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர் பட்டியலில் இடம் பெற்றதற்கான சான்றிதழ் அல்லது பிற மகப்பேறு நிதியுதவி பெற அரசு வழிகாட்டுதலின்படி கிராம சுகாதார செவிலியரின் / பல்நோக்கு சுகாதார (பெண்) பணியாளரின் சான்று
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினராக இருப்பின் அதற்குரிய சான்றிதழ் அல்லது வருமானம் குறித்த மேற்குறிப்பிட்ட மூன்று சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்று.
- கிராம சுகாதார செவிலியரால் / பலநோக்கு சுகாதார (பெண்) பணியாளரால் அளிக்கப்பட்ட ஊக்கத்தொகை பெறுவதற்கான தகுதி மற்றும் ஒப்புகை சான்றிதழ்

அரசு மருத்துவமனையில் பிரசவித்த பயனாளிக்கு வசிக்கும் இடத்தில் உள்ள கிராம சுகாதார செவிலியர் / பல்நோக்கு சுகாதார (பெண்) பணியாளரிடமிருந்து தகுதி மற்றும் ஒப்புகை சான்றிதழ் பெற இயலாத நிலையில் / ஒப்புகை சான்றிதழ் சமர்ப்பிக்க இயலாத நிலையில் பயனாளி உரிய ஊக்கத் தொகை பெற கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.

1. கிராம சுகாதார பணியாளர் / பலநோக்கு சுகாதார பெண் பணியாளரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தினை, பயனாளி பிரசவம் நிகழும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ, மருத்துவமனைக்கோ கொண்டு வராத பட்சத்தில், அக்காரணத்திற்காக, உதவித்தொகை வழங்குவதை தாமதிக்கக் கூடாது.
2. ஜனனி சுரக்ஷா யோஜனா விண்ணப்ப படிவத்தை, பணியிலிருக்கும் மருத்துவர், Case sheet-ல் இருக்கும் விவரங்களைக் கொண்டு நிரப்பி, பயனாளிக்கு, உதவித் தொகை கிடைக்க வழி செய்ய வேண்டும்.

## II. அரசு மருத்துவமனையில் நடைபெறாத பிரசவங்களுக்கு

(அ) வீட்டில் பிரசவம் நடைபெற்றிருந்தால்

- வருமானச் சான்றிதழ் அல்லது வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர் பட்டியலில் இடம் பெற்றதற்கான சான்றிதழ் அல்லது பிற மகப்பேறு நிதியுதவி பெற அரசு வழிகாட்டுதலின்படி கிராம சுகாதார செவிலியரின் / பல்நோக்கு சுகாதார (பெண்) பணியாளரின் சான்று

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினராக இருப்பின் அதற்குரிய சான்றிதழ் அல்லது வருமானம் குறித்த மேற்குறிப்பிட்ட மூன்று சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்று.
- கிராம சுகாதார செவிலியரால் / பலநோக்கு சுகாதார (பெண்) பணியாளரால் அளிக்கப்பட்ட ஊக்கத்தொகை பெறுவதற்கான தகுதி மற்றும் ஒப்புகை சான்றிதழ்
- கிராம சுகாதார செவிலியரிடமோ/ பல்நோக்கு சுகாதார பெண் பணியாளரிடமோ / ஊராட்சி மன்றத் தலைவரிடமோ / வார்டு உறுப்பினரிடமோ பெறப்பட்ட சான்று அல்லது சிசுவின் பிறப்புச் சான்றிதழ்

(ஆ) தனியார் மருத்துவமனைகளில் உள்ள பொதுப்பிரிவுகளில் பிரசவம் நடைபெற்றிருந்தால்

1. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர் என்பதற்கான வருவாய்த் துறையால் அளிக்கப்பட்ட சான்றிதழ்
2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினராயிருப்பின் அதற்குரிய சான்றிதழ்
3. பயனாளி வசிக்கும் இடம் கிராமமாய் இருப்பின் வசிக்கும் இடம் சார்ந்த கிராம சுகாதார செவிலியரால் / நகரமாய் இருப்பின் அப்பகுதி பல்நோக்கு சுகாதார பெண் பணியாளரால் அளிக்கப்பட்டுள்ள ஊக்கத் தொகை பெறுவதற்கான ஒப்புகை மற்றும் தகுதிச் சான்றிதழ்
4. தனியார் மருத்துவமனையின் பொதுப்பிரிவில் பிரசவம் நடந்ததற்கு ஆதாரமான விடுவிப்புச் சுருக்கம்

இவற்றைக் கொண்டு, பிரசவித்த தாய்மார்க்கு வசிக்கும் இடம் சார்ந்த ஆரம்ப சுகாதார நிலையம் / நகராட்சி அல்லது மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் உரிய ஊக்கத்தொகை காசோலையாக வழங்கப்படவேண்டும்.

4. <u>ஊக்கத் தொகை பெற, கருவுற்ற தாய்மார்களுக்கு கீழ்காணும் நலச்சேவைகள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.</u>



- கர்ப்பம் என்று தெரிந்தவுடனேயே பதிவு செய்திருத்தல்
- குறைந்தது மூன்றுமுறை கர்ப்பகால பரிசோதனை செய்திருத்தல்
- சிக்கலான கர்ப்பத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து வாகனவசதியுடன் தொடர்பு நிலை ஏற்படுத்தி ஆவன செய்திருத்தல்
- பிரசவ பின்கால பராமரிப்பு

ஆஷா மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு சேவைக்கு வழிவகை செய்திருத்தல்

## 5. விண்ணப்பம் பெறும் முறை

துணை சுகாதார நிலையம் / நகர நலவாழ்வு நிலையப் பகுதியைச் சார்ந்த கிராம சுகாதார செவிலியர்கள் / பலநோக்கு சுகாதார பெண் பணியாளர்களால் ஜனனி சுரக்ஷா யோஜனா ஊக்கத் தொகை பெற தகுதியுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் கண்டறியப்பட வேண்டும்.

அவ்வாறு கண்டறியப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களிடமிருந்து உரிய விண்ணப்பம் இரு நகல்களில் பெறப்படவேண்டும். இந்த விண்ணப்பம் கருவுற்ற ஐந்தாம் மாதத்திற்குள் பெறப்பட்டு, விண்ணப்பம் உரிய சான்றுகளுடன் முழுமையாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## 6. விண்ணப்பங்களை ஒப்புகை செய்தல்

பெறப்பட்ட விண்ணப்பத்தினை சரிபார்த்து விண்ணப்பத்தின் பகுதி இரண்டினை பூர்த்தி செய்து, கிராம சுகாதார பணியாளர் / பலநோக்கு சுகாதார பெண் பணியாளர் ஒப்புகை செய்த பின், விண்ணப்பத்தின் ஒரு நகலை கிராம சுகாதாரப் பணியாளர் / பல நோக்கு சுகாதாரப் பணியாளர் தன்னிடம் வைத்துக் கொண்டு மற்றொரு நகலை உரிய இணைப்புக்களுடன் பயனாளியிடம் அளிக்க வேண்டும். அதனை, மகப்பேறு நடைபெறும் மருத்துவமனையில் பயனாளியால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென, பயனாளி அறிவுறுத்தப்படவேண்டும். அவ்வாறு அனைத்து தகுதியுள்ள தாய்மார்களுக்கும் படிவம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அறிவுரை வழங்க வேண்டும்.

## 7. நிதி மற்றும் கணக்குகள்

### 1. நிதி பெறுவதற்கான முறை

அ. ஆரம்ப சுகாதார நிலையங்கள்

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் சென்ற ஆண்டின் மகப்பேற்றின் எண்ணிக்கை அடிப்படையில் பயனாளிகட்கு வழங்கப்பட்ட தொகையைக் கணக்கிட வேண்டும். இதில் துணை சுகாதார நிலையம், தனியார் மருத்துவமனை, வீடு போன்ற இடங்களில் நடைபெற்ற மகப்பேற்றினைக் கணக்கில் கொள்ள வேண்டும். இதில் சராசரியாக ஒரு காலாண்டில் பயனாளிகட்கு வழங்கப்பட்ட தொகையைக் கணக்கிட்டு இவ்விவரங்களை சம்பந்தப்பட்ட சுகாதார மாவட்ட துணை இயக்குநருக்கு (DDHS) அனுப்ப வேண்டும். அவ்விவரங்களின் அடிப்படையில் அன்னாரால் அந்த காலாண்டிற்குரிய தொகை முதலில் சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கப்பட வேண்டும். அதில் 60% தொகை பயனாளிகட்கு வழங்கிய பின்னர், அவ்விவரத்தை சம்பந்தப்பட்ட துணை இயக்குநருக்கு தெரிவித்து மீள(recoup) பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆ. இதர அரசு மருத்துவமனைகள்

இதர அரசு மருத்துவமனைகளான வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், நகராட்சி மற்றும் மாநகராட்சியில் உள்ள நலவாழ்வு மையங்களைப் பொறுத்த வரை (சென்னை மாவட்டத்தினைத் தவிர்த்து) சென்ற ஆண்டில் இப்பயனுக்குத் தகுதியுள்ள பயனாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு அரையாண்டில் வழங்கப்படக் கூடிய தொகையை கணக்கிட வேண்டும். அதன் விவரத்தை சம்பந்தப்பட்ட சுகாதார

மாவட்ட துணை இயக்குநருக்குத் (DDHS) தெரிவிக்க வேண்டும். அவ்விவரங்களின் அடிப்படையில், (அன்னாரால்) அந்த அரையாண்டிற்குரிய தொகை முதலில் வழங்கப்படும். அதில் 60% தொகை பயனாளிகட்கு வழங்கிய பின்னர் அவ்விவரத்தை சம்பந்தப்பட்ட துணை இயக்குநருக்குத் தெரிவித்து மீள பெற்றுக் கொள்ள வேண்டும்.

### சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்கள் மற்றும் சென்னையிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மகப்பேறு நிலையங்கள்

கடந்த ஆண்டில் இப்பயனுக்குத் தகுதியுள்ள பயனாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், ஒரு அரையாண்டில் வழங்கப்படக் கூடிய தொகையை கணக்கிட வேண்டும். அதன் விவரத்தை குழும இயக்குநர், மாநில நலவாழ்வு சங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும். அன்னாரால் அந்தத் தொகை முதலில் வழங்கப்படும். அதில் 60% தொகை வழங்கிய பின்னர், அவ்விவரத்தை குழும இயக்குநர், மாநில நலவாழ்வு சங்கத்திற்கு தெரிவித்து மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 2. வங்கிக் கணக்குகள்

இத்திட்டத்திற்கான வங்கிக் கணக்குகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் " . . . . . . . . . . . . . . . . . . . . . மருத்துவமனை A/c – JSY" என்ற பெயரில் துவக்கப்பட வேண்டும். அக்கணக்குகள் தனியாக நோயாளிகள் நல சங்கத்தால் பேணப்படவேண்டும்.

நோயாளிகள் நலச்சங்கம் துவக்கப்படாத நகராட்சிகளைப் பொறுத்த வரை " . . . . . . . . . . . . . . . . . . . . . . . . நகராட்சி A/c – JSY" என்ற பெயரிலும், மாநகராட்சி நலவாழ்வு மையங்களைப் பொறுத்தவரை இக்கணக்கினை ". . . . . . . . . . . . . . . . . . . . நலவாழ்வு மையம் A/c – JSY" என்ற பெயரிலும் துவக்கப்பட வேண்டும். அதனை, சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையரால் / நகர நல அலுவலரால் / குடும்ப நல அலுவலரால் பேணப்படவேண்டும்.

## 3. பதிவேடுகள்

1. இத்திட்டப் பயனாளிகளின் விவரங்களைப் பதிவு செய்ய உரிய பதிவேடு (JSY Register) பேணப்படவேண்டும். பெறப்படும் தொகையை காசோலைகள் பெறும் பதிவேட்டில் பதிய வேண்டும்.
2. வழங்கப்படும் தொகை காசோலை வழங்கும் பதிவேட்டில் பதியப்படவேண்டும்.
3. தனி ரொக்கப்பதிவேடு பேணப்படவேண்டும்.
4. ஒவ்வொரு மாதமும், 10ஆம் தேதிக்குள் பயனாளிகட்கு வழங்கிய தொகையை வங்கிக் கணக்குடன் ஒத்திசைவு செய்யப்படவேண்டும்.
5. இதற்கான பதிவேடுகள் வழங்கப்படும்.

## 4. காலமுறை அறிக்கை

1. ஒவ்வொரு சுகாதார மாவட்டத்திலுள்ள

   1) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்

   2) அரசு மருத்துவமனைகள்

   3) அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

   4) நகராட்சி மற்றும் நலவாழ்வு மையங்கள் (சென்னை தவிர்த்து) ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு மாதமும் 7–ஆம் தேதிக்குள் பயனாளிகட்கு வழங்கிய தொகை, பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த காலமுறை அறிக்கையை (மாதிரி படிவம் இணைக்கப்பட்டுள்ளது) சம்பந்தப்பட்ட துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) க்கு (DDHS) அனுப்ப வேண்டும். பெறப்பட்ட அறிக்கைகளை தொகுத்து, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், மாநில நலவாழ்வு சங்கத்திற்கு ஒவ்வொரு மாதமும் 10–ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

2. சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் இக்காலமுறை அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 7–ஆம் தேதிக்குள் மாநில நலவாழ்வு சங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

3. சென்னை மாநகராட்சியிலுள்ள நலவாழ்வு மையங்களைப் பொறுத்தவரை, இக்காலமுறை அறிக்கையினை சென்னை மாநகராட்சி ஆணையரால் ஆய்வு செய்து, அதற்கான அறிக்கையை மாநில நலவாழ்வு சங்க குழும இயக்குநருக்கு ஒவ்வொரு மாதமும் 10–ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

**Sd/ ...**
**(Dr.C.N. Mahesvaran)**
**Mission Director,**
**National Health Mission-TN.**

To

The All District Collectors
The Director of Medical Education
The Director of Medical & Rural Health Services
The Director of Public Health & Prevention Medicine
All Joint Directors in the District
All Deputy Director of Health Services
Medical Superintendent of Taluk & District Hospitals & Non-Taluk Hospitals
All Primary Health Center Medical Officers
Programme Officers and HOD's of Vertical Programme
Copy Submitted to **Secretary to Government**
**Health & Family Welfare Department,**
**Secretariat, Chennai.**

# ஜனனி சுரக்ஷா யோஜனா
## ஊக்கத் தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. விண்ணப்பதாரரின் வயது (ஆண்டுகளில்) :
3. அங்க அடையாளங்கள் : 1.
   2.
4. விண்ணப்பதாரரின் முகவரி :
5. கணவர் / தந்தையின் பெயர் :
6. கணவர் / தந்தையின் தொழில்:
7. கணவர் பெயர் இடம் பெற்றுள்ள குடும்ப அட்டையின் எண். :
8. குடும்ப ஆண்டு வருமானம் : ரூ.
9. வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவரா ? ஆம் / இல்லை
   (ஆம் எனில் கீழ்க்கண்ட சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) (வருமானச் சான்றிதழ் அல்லது வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர் பட்டியலில் இடம் பெற்றதற்கான சான்றிதழ் அல்லது பிற மகப்பேறு நிதியுதவி பெற அரசு வழிகாட்டுதலின் படி கிராம சுகாதார செவிலியர் / பலநோக்கு சுகாதார (பெண்) பணியாளர் ஒருவரால் அளிக்கப்பட்ட சான்று)
10. விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் / பழங்குடியினரா? ஆம் / இல்லை

    ஆம் எனில் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? ஆம் / இல்லை
11. கருவுற்று எத்தனை மாதம் ஆகியுள்ளது? மாதம்

விண்ணப்பதாரரின் கையொப்பம்

*கீழ்க்கண்ட விவரங்கள் கிராம சுகாதார செவிலியர் / பலநோக்கு சுகாதார பெண் பணியாளரால் நிரப்பப்படவேண்டும்*

1. கருவுற்ற தாயின் அடையாள எண் :

2. எதிர்பார்க்கப்படும் மகப்பேறு நாள் :

3. கருவுற்ற தாய் மருத்துவபரிசோதனைக்கு எத்தனை முறை வந்துள்ளார்? (தாய் சேய் நல அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும்) :

| 1 | 2 | 3 |
|---|---|---|
| | | |

4. விண்ணப்பத்திலுள்ள விவரங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டனவா? :

| ஆம் | இல்லை |
|---|---|
| | |

5. கருவுற்ற தாய் ஜனனி சுரக்ஷா யோஜனாவிற்கு தகுதியுள்ளவரா? :

| ஆம் | இல்லை |
|---|---|
| | |

இடம் :

நாள் :

கிராம சுகாதார செவிலியர் /
பலநோக்கு பணியாளரின் கையொப்பம்

பெயர்:

அலுவலக முத்திரையுடன்

*கீழ்க்கண்ட விவரங்கள் தொகை வழங்கும் இடத்தில் நிரப்பப்பட வேண்டும்*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | மகப்பேறு நடைபெற்ற இடம் (பெயர் முகவரியுடன்) | : | அரசு மருத்துவமனை | தனியார் * | வீட்டில் ** |
| 2 | உள்நோயாளிகள் பதிவேடு வரிசை எண் | : | | | |
| 3 | மகப்பேறு நாள் | : | | | |
| 4 | பிறப்பின் தன்மை | : | உயிருடன் / இறந்து பிறந்தது | | |
| 5 | ஜனனி சுரக்ஷா யோஜனாவின் கீழ் உதவித் தொகை பெற தகுதி உள்ளவரா? | : | ஆம் / இல்லை | | |
| 6 | விண்ணப்பப் படிவம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா? | : | ஆம் / இல்லை | | |
| 7. | பயனாளி எவ்வளவு தொகை பெறத் தகுதியானவர்? | : | ரூ.500 / ரூ.600 / ரூ.700 | | |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், பயனாளிக்கு ஊக்கத் தொகையாக ரூ. /– (ரூபாய் . ................................ மட்டும்) அனுமதியளிக்கப்படுகிறது.

1. காசோலை எண். / நாள் :
2. காசோலை வழங்கிய நாள் :

மருத்துவ அலுவலரின் கையொப்பம்
முத்திரையுடன்

* தனியார் மருத்துவமனையில் பிரசவம் நடைபெற்றிருந்தால் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர் என்று வருவாய்த்துறையின் சான்று + விடுவிப்புச்சுருக்கத்தின் நகல் இணைக்கப்படவேண்டும்.

** வீட்டில் பிரசவத்திற்கு – கிராம சுகாதார செவிலியரிடமோ / பலநோக்கு சுகாதார (பெண்) பணியாளரிடமோ / ஊராட்சி மன்றத் தலைவரிடமோ / வார்டு உறுப்பினரிடமோ பெறப்பட்ட சான்று அல்லது சிசு பிறப்புச் சான்றிதழ்

## பயனாளியின் ஒப்புகை

ஊக்கத் தொகை ரூ. /– (ரூபாய் ................................ மட்டும்) காசோலையாக பெற்றுக் கொண்டேன்.

பயனாளியின் கையொப்பம்

# ஜனனி சுரக்ஷா யோஜனா
## மாதாந்திர அறிக்கை

மாவட்டம் :

மருத்துவமனையின் பெயர் :

மாதம் :

| வரிசை எண். / நாள் | ஆரம்ப இருப்பு | இம்மாதத்தில் பெறப்பட்ட தொகை | இம்மாதத்தில் பயனாளிகட்கு வழங்கிய தொகை | | இம்மாத இறுதியில் இருப்பு | | வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள காசோலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | ரொக்கப் புத்தகத்தின்படி | வங்கிப் புத்தகத்தின்படி | |
| | | | | | | | |

மருத்துவ அலுவலர் / நகராட்சி ஆணையர் /
மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்

பெறுநர்

துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்), ..................... மாவட்டம்

நகல்

இணை இயக்குநர் மருத்துவப் பணிகள்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை.